MAALAI MALAR

OCT 25, 2022

PAGE 3



5 மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களுடன்

# புதுவை பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

புதுச்சேரி,அக்.25—

புதுவை பல்கலைக்கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் 5 நிறுவனங்களான, அசாம் திப்ருகார் —பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம், உத்திரபிரதேசம் கோரக்பூர் —பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம், மத்திய பிரதேசம் ஜபல்பூர் —தேசிய பழங்குடியினர் ஆரோக்கிய ஆராய்ச்சி நிறுவனம், பீகார் பட்னா —ராஜேந்திரா நினைவு மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுவை வெக்டார் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையம் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

நிகழ்ச்சியில், இந்திய மருத்துவ ஆராய்ச்சி இயக்குநர்கள் அஷ்வனி குமார், கன்வர் நரேன், ரஜினிகாந்த் ஸ்ரீவஸ்தவா, அபரூப் தாஸ், டாக்டர் கிருஷ்ணா பாண்டே, சர்வதேச சுகாதாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறைத் தலைவர் முகேஷ் குமார், டெல்லி இந்திய மருத்துவ ஆராய்ச்சி துணை இயக்குநர் ஜெனரல் லட்சுமிநாராயணன் பங்கேற்றனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், 5 இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களிலும் ஒரு புதிய முதுகலை படிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.20 ஆயிரம் வழங்கப்படும்.

மேலும் முன்னவர் பட்டத்திற்கான இரட்டை வழிகாட்டி முறை, மாநாடுகள், பட்டறைகள் நடத்துதல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிமாறிக் கொள்ளுதல் உள்ளிட்ட செயல்திட்டங்கள் அமல்படுத்தப்பட உள்ளது.

DINAMALAR
25 OCT 2022
PAGE 4



# காரைக்கால் கல்வி நிறுவனங்கள் பல்கலை.,யுடன் ஒருங்கிணைப்பு



■ சத்தி திட்டத்தின் கீழ், காரைக்கால் புதுச்சேரி பல்கலைக் கழக கணினி துறை பேராசிரியர் புவனேஸ்வரி தலைமையிலான குழுவினர், ஜிப்மர் கிளை அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

**புதுச்சேரி, அக். 25–** காரைக்கால் ஜிப்மர் கிளை, பஜன்கோ, காமராஜர் பொறியல் கல்லூரி ஆகியவற்றுடன், புதுச்சேரி பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்த கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அறிவியல் ஆராய்ச்சி தேவையைச் சமாளிக்க அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில் நுட்ப உதவி நிறுவனங்கள்'சத்தி' என்ற பெயரில் அமைக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, காரைக்காலில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகம் கணினி அறிவியல் துறை சத்தி திட்டத்தின் கீழ், ஒருங்கிணைப்பை துவக்கியுள்ளது.

அதன்படி புதுச்சேரி பல்கலைக்கழகம் ஜிப்மர் கிளை, பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கருணாநிதி அரசு முதுகலை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், காமராஜர் இன்ஜினியரிங் இன்ஸ்டிடியூட் ஆகியவை சத்தி மையம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி சத்தி மையத்தில் உயர்தர அதிநவீன கருவிகள் மற்றும் ஸ்மார்ட் உற்பத்தி வசதிகளுடன் பொருத்தப்பட உள்ளது. இது போன்ற கருவிகளை பொதுவாக பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், குறுசிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவற்றால் வாங்க முடியாது.

எனவே தொழில்ரீதியாக நிர்வகிக்கப்படும் சேவைகளை திறந்த அணுகல் கொள்கையுடன், ஒரே கூரையின் கீழ் அதிக அளவிலான செயல்பாட்டு வெளிப்படைத் தன்மையுடன், பெரிய அளவிலான உபகரணங்களை செயல்படுத்த, இந்த மையம் உதவ உள்ளது.

மேலும், இத்திட்டத்தின்படி ஆராய்ச்சியில் மேம்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கப்பட உள்ளது. தொடக்கநிலை தொழில் நிறுவனங்கள், நடுத்தர, சிறு, குறு நிறுவனங்கள், குறைந்த நிதியுதவி பெற்ற கல்வி நிறுவனங்களும் அதிநவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம் என்பது குறிப்பிடதக்கது.

DINAMALAR

25 OCT 2022

PAGE 2



தமிழகத்தில் நடந்த நூலகம் மற்றும் தகவல் அறிவியல் சொசைட்டி மாநாட்டில், புதுச்சேரி பல்கலைக்கழக நூலகர் விஜயகுமாருக்கு, தேசிய அளவில் சிறந்த நூலகர் விருது வழங்கப்பட்டது.

# புதுச்சேரி பல்கலைக்கழக நூலகருக்கு விருது

**புதுச்சேரி, அக். 25–**

புதுச்சேரி பல்கலைக் கழக நூலகர் விஜய குமாருக்கு, தேசிய அள வில் சிறந்த நூலகர் விருது வழங்கப்பட்டது.

தமிழகத்தில் அண்மை யில் நூலகம் மற்றும் தக வல் அறிவியல் சொசைட்டி மாநாடு நடந்தது.

இதில், தேசிய அளவில் நூலக வளர்ச்சிக்கு பாடு பட்ட நூலகர்கள் கவுரவிக் கப்பட்டனர்.

புதுச்சேரி பல்கலைக் கழக நூலகர் விஜயகுமா ருக்கு தேசிய அளவில் சிறந்த நூலகர் விருது வழங்கப்பட்டது.

நூலகம் தகவல் அறி வியலில் அவரது பங் களிப்பினை பாராட்டி இவ்விருது வழங்கப் பட்டது.

விருது பெற்ற பல்க லைக்கழக நூலகர் விஜய குமாரை துணை வேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.